# வள்ளுவரும் வேமனாவும் காணும் ஆண் ஒழுக்கம்

**A.Parimalagantham**

**முன்னுரை** : சமுதாயம் என்னும் கட்டுக் கோப்பில் மனிதன் வாழத் தொடங்கியவுடன் சில வரை முறைகளே அது வகுத்தது அந்த வரைமுறைகளே பழக்க வழக்கங்கள், சட்டதிட்டங்கள் என்று பினபற்றபட்டன. இந்த வரைமுறை இறைவன் ஆணை என்று சொல்லித் தனிமனிதனுடைய நடத்தையையும் சுதந்திரத்தையும் சமுதாயம் கட்டுப்படுத்தியது. இவ்வாறு தனி மனிதனுக்கு வரையறுத்துக் கொடுத்த வரைமுறைகளே ஒழுக்கம் ஆகும்.

சமுதாயத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாகச் சொல்லப்பட்ட ஒழுக்கம் நாளடைவில் பெண்ணுக்கே உரித்தான 'கற்பு' என்னும் அணிகலனாக விளங்கியது. சமுதாயம் ஆணுக்கு ஆளும் அதிகாரத்தைக் கொடுத்தது. ஆணை, 'சாண் பிள்ளை என்றாலும் ஆண்பிள்ளை', 'ஆஸ்திக்கு ஒரு ஆண்' என்று சமுதாயத்தின் ஆணிவேர் ஆக்கியது. சமுதாய நலன் கருதிய அறிஞர் பெருமக்கள் பலர் அவரவர் மொழிகளில் அவரவர் சமுதாயக் கட்டுப்பாட்டிற்குத் தகுந்தபடி தீயநெறிகளை நீக்கி மனிதன் நன்னெறிகளில் வாழ நீதி நூல்கள் பல நல்கினார். அத்தகைய நீதிநூல்களில் திருக்குறள் தமிழில் முதலிடம் வகிக்கிறது. அதுபோலவே வேமன பத்யாலு தெலுங்கில் முக்கியமானதொன்றாக விளங்குகிறது.

**கட்டுரையின் நோக்கம்:** சமுதாயத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது ஒழுக்கம் பெண்ணுக்குகென்ற ஒழுக்கமாக கற்பு திகழ்வது போல ஆணுக்கென்ற ஒழுக்கமாகக் திருக்குறளிலும் வேமனபந்தயத்திலும் ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா? அது எத்தகையது? இக்காலத்திற்கு எவ்வாறு அது பொருந்தும்? என்று ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

கட்டுரையின் கருவான ஆண் ஒழுக்கத்தைப் பற்றி இரு நூல்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் முன் அந்நூல்களைப் பற்றியும், அவற்றை இயற்றிய ஆசிரியர்கள் பற்றியும், அந்நூல்கள் இயற்றப்பட்ட மொழிகள் பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்வது இன்றியமையாதது.

இந்தியாவில் இந்தோஆரியன், திபெத்தோ-பர்மன், ஆஸ்ட்ரோ-ஏசியாடிக், திராவிடம் என்ற நான்கு மொழிக் குடும்பங்கள் இருக்கின்றன.இவற்றில் திராவிடம் என்னும் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது தமிழும் தெழுங்கும், இவை இரண்டும் மக்கள் வளமும் இலக்கண இலக்கிய வளங்களும் நிறைந்த பழம்பெரும் மொழிகளாகும். இரண்டு மொழிகளின் அமைப்பில் ஒற்றுமையும் வேற்றுமையும் காணப்படுவது போல மரபிலும் பழக்கவழக்கங்களிலும், பண்பாட்டிலும் ஒற்றுமையும் வேற்றுமையும் கலந்தே காணப்படுகின்றன.

**திருவள்ளுவர்** : கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள் என்ற பெருமை கொண்ட திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் என்பது அறிஞர்களின் ஒருமித்த கருத்து. இது இவரின் இயற்பெயர் அல்ல. இவரின் இயற்பெயரும், காலமும் அறிதியிட்டுக் கூற இயலாமல் இருக்கிறது. இவரின் வாழ்க்கை வரலாறு பற்றிய சான்றுகளும் இல்லை. இருந்தபோதிலும் இவரின் காலம் கிறிஸ்து சகாப்தத் தொடக்காமாக இருக்கலாம். ஆதிபகவன் என்ற தாய்தந்தையர்க்குப் பிறந்தவராக இருக்கலாம். தாய் தந்தையர்களால் புறக்கணிக்கப்பட்ட இவரை வள்ளுவக் குடியைச் சேர்ந்தவர் வளர்த்து இருக்கலாம். என்ற கருத்துக்கள் அறிஞர்களிடையே காணப்படுகின்றன.

இவர் சிறந்த அறிஞராகவும் தத்துவவாதியாகவும் அரசியல்வாதியாகவும் மதிக்கப்படுகிறார். நன்னெறியில் மனிதன் வாழ. நூல் இயற்றிய இவர் சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை. சமத்துவத்தைப் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என வலியுறுத்தும் வள்ளுவர் நீதிக்கு மதிப்புக் கொடுத்தாரே ஒழிய மூடநம்பிக்கையை மதிக்கவில்லை, உலகப் பெருமை வாய்ந்த திருகுறளை நல்கிய வள்ளுவப் பெருந்தகைக்கு பொய்யாமொழிப்புலவர், தெய்வப்புலவர், செந்நாப்புலவர் என்று பலசிறப்புப் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

**வேமனார்:** வேமரனாரின் வாழ்க்கை வரலாறு, காலம் இயற்பெயர் பற்றிய சரித்திரச் சான்றுகள் போதுமான அளவு இல்லை. இவா் தன்னை 'வேம' என்றோ 'வேமன' என்றோ கூறிக் கொள்கிறார். இவர் காவு என்னும் சாதியைச் சேர்ந்தவராக இருக்கலாம். கடப்பா என்னும ஜில்லாவில் கண்டிக் கோட்டை வட்டாரத்தில் பிறந்திருக்கலாம் என்று பண்டித ஜெயந்த் சுப்ரமணிய சாஸ்திரி (2004) கருதுகிறார். வேமனார் 1625 A.Dயில் பிறந்தவராக இருக்கலாம். இவரது பாடல்கள் 17-ம் நூற்றாண்டின் முதல் பகுதியில் எழுதப்பட்டிருக்கலாம். முகமதியர்களின் ஆட்சிகாலமாகிய அந்நாளில் வேமனாரின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் அதிகாரமும் செல்வாக்கும் உடையவர்களாக இருந்தபோதிலும் வேமனார் ஒரு யோகியைப் போல தனியாகவே வாழ்ந்திருக்கிறார்.

'வேம' 'வேமன' என்ற பெயர்கள் தெலுங்கு வழக்கில் காணப்படாததாலும், சமஸ்கிருதத்தில் இதற்கு மக்கமும் என்ற பொருள் வழங்கப்பட்டிருப்பதாலும் இது ஒரு விருது என்று கருதும் வாய்ப்பு இருக்கிறது கிரேக்கத் தத்துவவாதி ப்ளாட்டோவின் கருத்துக்களுடன் வேமனாரின் கருத்துக்கள் ஒத்துப் போவதால் இவர் இந்தியாவின் ப்ளாட்டோவாக்கஸி கருதப்படுகிறார். மேலும் வேமனாரின் நீதி மொழிகள் டெமாகிரிட்டஸின் கொள்கையுடன் ஒத்துப்போகிறது என்பது பண்டித ஜெயந்த் சுப்ரமணிய சாஸ்திரியின் (2004) கருத்து.

**திருக்குறள்:** அறம் பொருள் இன்பம் என்னும் முப்பாலை ஒரு சேரக் கொண்ட ஒரே நூல் திருக்குறள். இது மனித உரிமைகளை (human valuers ) வெளிப்படுத்தும் நூல் ஆகும். மோட்சத்தை அடைய உதவும் துறவு பற்றிய துறவறவியலும் (அதிகாரம் 25-37) இடம் பெற்றிருப்பதால் நாற்பால் என்று சொல்லக்கூடிய பெருமை உடையது. யாப்பு காரணமாக இன்று திருக்குறள் என்று அழைக்கப்படுகிறது. என்றும் அன்று வள்ளுவர் அறம் என்றே பெயர் இட்டிருக்க வேண்டும் என்றும் வ.சுப.மாணிக்கம் கருதுகிறார். ஆனால் சண்முகம் பிள்ளை இந்நூலுக்கு முப்பால் என்ற பெயர் இருந்திருக்க வேண்டும் குறள் என்னும் பாட்டு வகையில் அமைந்திருப்பதால் குறள் என்ற பெயர் வந்ததென்றும் 'திரு' என்பது இந்நூலின் சிறப்புக் கருதி வந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார். (தர்மாரெட்டி 1984) சுருங்கிய சொற்களால் அரும்பெரும் பொருட்களைக் கூறும் நூல் திருக்குறள், குறட்பா வகைகள் அமைந்த திருக்குறள் தமிழில் எழுதப்பட்டிருந்தாலும் தமிழ் இனத்திற்கு மட்டுமல்லாமல் உலக மக்கள் அனைவருக்கும் பயனுடையதாக விளங்குகிறது. முடியாட்சிக்குத் திருக்குறளில் அன்று கூறப்பட்ட நெறிமுறைகள் குடியாட்சிக்கு இன்று பொருந்தத்தக்கதாக இருப்பது வியப்பற்குரியது. கற்பனைத் திறனும் மொழி வளமும் நிறைந்த காமத்துப்பால் வரம்பிற்குட்பட்ட காதல் வாழ்கையை மிகவும் அழகாகச் சித்தரிக்கிறது. இத்தகைய திருக்குறள் முதல் அடியில் நான்கு சீர்களையும் இரண்டாவது அடியில் 3 சீர்களையும் உடையது. அதிகாரத்திற்குப் பத்து பாடல்களாக 133 அதிகாரங்களையும், 1330 பாடல்களையும் கொண்டது. பொய்யாமொழி முப்பால், வாயுரை வாழ்த்து, உலகப் பொதுமறை என்ற சிறப்புப் பெயர்களையும் கொண்டது.

**வேமன பத்தியங்கள்:** அனைவருக்கும் புரியும் வகையில் எளிய நடையில் எழுதப்பட்டது. இந்தப் பாடல்களின் எண்ணிக்கை பல விதமாக உள்ளன. சில தொகுப்புக்கள் பின்வருமாறு: 693 பாடல்களைக் கொண்ட 'தி வர்கஸ் ஆப்வேமனா 1829, 100 பாடல்கள் கொண்ட "தெய்வீகத்தன்மை பொருந்திய வேமன்ன யோகீஸ்வரா் திருவாய் மலா்ந்தருளிய தெலுங்கு பத்தியங்கள்" என்ற சிவப்பிரசாத்தின்உரையோடு கூடிய நூல் 1892,சாகித்ய அகாடமி 1969-ல வெளியிட்ட பதிப்பு 1215 பாடல்களைக் கொண்ட நூல், 4035 பாடல்கள் கொண்ட வேமன இரத்னாகரமு 1913, 1000 பாடல்கள் கொண்ட வேமன பத்யம் 1875, 3002 பாடல்கள் கொண்ட வேமன ஞானார்க்க பத்யமுலு 1961, 2504 பாடல்கள் கொண்ட வேமன பத்ய ரத்னா கரமு (தர்மாரெட்டி 1984),

சி.பி. ப்ரவுன் சேகரித்த வேமன பத்யங்களுடன் இன்னும் .சிலவற்றைச் சேர்த்து 1215 பாடல்களாக வெளி வந்த சாகித்ய அகாடமி பதிப்பில் நான்கு பிரிவுகள் உள்ளன.அவை கவிசௌளத்வமு, வேமன ஞானமார்க்கப்பாடள், சில்லற பாகம், உபபாகம் அதே சி, பி. ப்ரவுன் சேகரித்த வேமனார் பாடல்களைப் பண்டித ஜெயந்த் சுப்ரமணிய சாஸ்திரி தொகுத்து ஸ்ரீ வேமன பத்ய சாரமிர்தமு என்ற நூலாக 1153

பாடல்களுடன் 2004-இல் வெளியிட்டு உள்ளார். இது வைதீக, அக்ஷேபண, பிராந்தி மூலகம் என்ற பிரிவுகளைக் கொண்டது. இந்தக் கட்டுரைக்குத் தேவையான எடுத்துக்காட்டுப் பத்யங்கள் இந்தத் தொகுப்பிலிருக்து கையாளப்பட்டுள்ளது.

கவி சௌதமு என்ற பிரிவில் சிவபெருமானைப் பற்றியும், வேமனப் பாடல்களைப் படிப்பதால் உண்டாகும் நன்மைகள் பற்றியும் கூறியிருக்கிறது. இரண்டாவது பிரிவாகிய வேமன ஞான மார்க்கப் பாடல்களில் மனத்தூய்மை, செயல் தூய்மை, தன்னுள்ளே இறைவன் உள்ளமை, அவனை அடையும் பற்றற்ற மனம் முதலிய செய்திகள் உள்ளன. மூன்றாவது பிரிவாகிய சில்லற பாகத்தில் புராணம் கூறும் செய்திகள், கற்பிப்பவரின் இன்றியமையாமை, இல்வாழ்வான் பெறும் இடுக்கன்கள், ஊழின் வன்மை, அறத்தின் பயனையும், பாவத்தின் பயனையும், இப்பிறவியலேயே காணலாம் போன்ற செய்திகள் உள்ளன. நான்காவது பிரிவாகிய உபபாகத்தில் ஈகை, நிலையாமை, செய்யும் வினையை இடம் அறிந்து செய்ய வேண்டும் என்றும் உலோபிகளைப் பழித்தும், இறைவனைக் காணத்தூய்மையான மனம் வேண்டும் போன்ற செய்திகளும் உள்ளன. இதையே சி.பி.ப்ரவுன் மனத்தூய்மை, செயல் தூய்மை கொண்ட ஒழுக்கம் என்ற பிரிவாகவும், கற்பிப்பவரின் இன்றியமையாமை, ஈகை, நிலையாமை போன்றவற்றைக் கொண்ட அங்கதம் என்ற பிரிவாகவும், இறைவன் உள்ளமை ஊழின் வன்மை, இறைவனைக் காணத்தூய்மையான மனம் வேண்டும் போன்றவற்றைக் கொண்ட மெய்யுணர்வு என்ற மூன்று பிரிவாகப் பிரித்து இருப்பதாக தர்மா ரெட்டி (1984) கூறுகிறார். தொகுப்புகள் எத்தனையானாலும், பத்தியங்களின் எண்ணிக்கை மாறினாலும் அவை உணர்த்தும் செய்தி ஒன்றுதான். படிப்பதற்கு எளிய நடையுடன் உலக நெறியை விமர்சித்து ஞான மார்க்கத்தைப் போதிக்கும் நூல் என்று தெளிவாகிறது.

வேமன பத்தியங்கள் சதக இலக்கிய வகையைச் சேர்ந்தது என்பர். தெலுங்கு மொழிச் சமூகத்தின் இயல்பான மகுடத்தை இறுதி அடியிலோ அல்லது இறுதிச் சீரிலோ கொண்டது.[11] "விஸ்வதாபி ராமா வினுர வேம" என்பது மகுடமாகும். ஆனால் வேமனாரின் பாடல்கள் ஆயிரக் கணக்கில் இருப்பதால் இது சதக இலக்கிய வகையைச் சேர்ந்தது. சதக இலக்கியங்களில் ஒன்றல்ல. இவர் பாடல்கள் ஆடவெலதி என்னும் பாவகையைச் சேர்ந்தது.

ஆடவெலதி வேமன பத்தியங்கள் நான்கு அடிகளைக் கொண்டது. முதல் அடியிலும் மூன்றாம் அடியிலும் வரிசையாய் முதல் மூன்று சூரியகணங்களும் அடுத்து இரண்டு சந்திர கணங்களும் இருக்கும். இரண்டாம் அடியிலும் நான்காம் அடியிலும் ஐந்து சூரிய கணங்களும் முறையாய் இருக்கும். ஒவ்வொரு அடியின் முதற் சீரின் முதல் எழுத்தும் நான்காம் சீரின் முதல் எழுத்தும் என்றியிருக்கும். இது ஆடவெலதி பாவகையின் இலக்கணம். வேமனார் இயற்றிய பாடல்களைத் தவிர அநேக பாடல்கள் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

திருவள்ளுவர் – வேமனார் ஒற்றுமையும் வேற்றுமையும்: இரு நூலாசிரியர்களின் வாழ்க்கை வரலாறு பற்றியோ வாழ்ந்த காலம் பற்றியோ இயற் பெயர் பற்றியோ போதி அளவு சரித்திரச் சான்றுகள் கிடைக்க வில்லை. இருபுலவர்களும் மனிதனை நன்னெரியால் வாழவழி வகுக்கும் நீதி நூல்களை எழுதி இலக்கியத்தில் முக்கிய இடம் வகிக்கின்றனர். இருவரும் சிறந்த புலவர்கள். இரு புலவர்களும் பாமர மக்களிடையே உலவும் உவமைகளையும் உருவகங்களையும் பயன்படுத்தியதால் மக்களிடையே செல்வாக்கைப் பெற்றிருக்கின்றனர். மனத் தூய்மையே அறமாகும் என்பது இருவரின் கருத்தாகும்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற (குறள்-34)
புறத்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மை யால் காணப்படும் (குறள்-298)

இரு ஆசிரியர்களிடையேயும் சொல்லத்தக்க வேறுபாடுகளும் இருக்கின்றன. வள்ளுவர் இல்லறத்தில் இருந்து நீதிகளைச் சொல்கிறார். வள்ளுவர் சாதாரணக்குடியைச் சேர்ந்தவர் ஆனால் வேமனார் செல்வாக்கும் அதிகாரமும் உள்ள பரம்பரையைச் சேர்ந்தவர் என்றும் சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற இருவித கருத்துக்கள் இருக்கின்றன.

திருக்குறளும் வேமனப் பத்யங்களும் மூன்று பிரிவுகளை உடையன. (அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று திருக்குறளும், ஒழுக்கம், அங்கதம், மெய்யுணர்வு என்று வேமனபத்தியங்கள்) இருநூல்களிலும் எளிய உவமைகளும் உருவகங்களும் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன. இருவர் சொல்லும் நீதி மொழிகளில் பெருமளவு ஒற்றுமையும் காணப்படுகிறது.

வள்ளுவரின் திருக்குறள் திட்டமிட்டு தெளிவாகப் படைக்கப்பட்டது. ஆனால் வேமனார் பாடல்களை அவர் தன் போக்கில் பாட அவரின் சீடர்களால் எழுதப்பட்டவை. திருவள்ளுவரின் குழு ஏழுசீர்களைக் கொண்ட வெண்பா நடையில் இருக்கிறது. வேமனார் பாடல்கள் நான்கு வரிகளைக் கொண்ட ஆடவெலதி என்னும் நடையில் இருக்கிறது. திருக்குறளைகப் போல வேமனாவின் பாடல்கள் மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தாலும் அவை அதிகாரங்களாகவோ, அதிகாரத்திற்கு இத்தனை பாடல்கள் என்றோ திட்டமிட்டுக் கூறப்படவில்லை. திருக்குறள் 133 அதிகாரங்களில் 1330 பாடல்களைக் கொண்டது என்று அறுதியிட்டுக் கூறமுடியும் ஆனால் மேனார் பாடல்கள் மொத்தம் இத்தனை என்று அறுதியிட்டுக் கூறமுடியாது.

ஒழுக்கம் என்றால் இதுதான் என்று வள்ளுவரோ வேமனாரோ வகுத்துக் கூறாவிட்டாலும் ஒழுக்கத்தின் உயர்வைப் பற்றி ஒழுக்கமுடைமையில் ஒழுக்கம் உயிரை விடச் சிறந்தது என்பதை

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (குறள்-131)

சான்றோர் காட்டிய நெறியோடு பொருந்தி வாழத் தெரியாதவர் எத்தனை கல்வி கற்றவராக இருந்தாலும் கல்லாதவராகவே கருதப் படுவர் என்பதை

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவில்லாதவர் (குறள்-140)

என்றும் விளக்குகிறார். வேமனார் பிற பெண்களைப் பாராதவனும், அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படாதவனும் அடுத்தவர் கோபத்தைப் பொறுப்பவனும் புத்தியுள்ளவன் அதாவது ஒழுக்கம் உள்ளவன் என்பதைப்,

பிற பெண்ணிற்குத் தூரமுடைய வனாகி
பிறர் தன மதனைக் காணாது பிறர் உயர்வு கருதுபவனாகி
பிறர் கோபத்திற்குதத் தான் கோபியாது
பிறர் புகழ வாழ்பவன் புத்தியுள்ளவன்

என்கிறார்.

இருபாலாருக்கும் உரிய ஒழுக்கமாக ஒழுக்கமுடைமையில் சொல்லிய வள்ளுவர் ஆண் பெண் இருவருக்கும் இருக்கவேண்டிய ஒழுக்கத்தை ‘இல்வாழ்க்கை’ பிறனில் இழையாமை என்ற அதிகாரங்களில் ‘இல்லறவியலிலும்,’ “பெண் வழிச் சேறல்” விரைவின் மகளிர் ‘கள்ளுண்ணாமை’ சூது என்னும் அதிகாரங்களில் பொருட்பாலில் நட்பியலிலும் அமைத்திருக்கிறார். வேமனார் ஆணுக்குரிய ஒழுக்கத்தை தனித் தனி அதிகாரமாகக் கொடுத்தபடியால் எங்கெங்கு வள்ளுவருடன் ஒத்துப் போகிறாரோ அங்கங்கு அவருடைய கருத்துக்கள் உணர்த்தப்பட்டு இருக்கிறது.

**இல்வாழ்க்கை:** கணவன் மனைவியாக ஆண் பெண் இருவரும் சேர்ந்து வாழும் இனிய வாழ்க்கை இல்வாழ்க்கை ஆகும். இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்தி இனிய மழலைச் செல்வங்களைப் பெற்று இந்த உலகில் இனிது வாழ்ந்து புகழ் எய்தி மறு உலகை அடைய வேண்டிய புண்ணியங்களையும் தேட இல்வாழ்க்கை உதவுகிறது. இத்தகைய இல்வாழ்க்கையில் பின்பற்றப்படும் அறம் இல்லறமாகப் போற்றப்படுகிறது. இதில் சிறந்த ஆண்மகனானவன் தன் நெறி தவறாது பிறரையும் அறநெறியில் நிறுத்துபவனாக இருக்க வேண்டும். மனைவி மக்களுடன் குடும்ப நெறி தவறாமல் நடக்க வேண்டும். பழிபாவங்களுக்கு அஞ்சி, தேடிய பொருளை தான் மட்டுமல்லாது பிறருக்கும் கொடுத்து உதவ வேண்டும், காலஞ் சென்ற தன் மூதாதையர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்பவர்களைக் காப்பாற்ற வேண்டும் துறவிகளை ஆதரிக்க வேண்டும். இவ்வாறு வாழ்பவனை சிறந்த ஆண்மகனாக, தெய்வத்திற்குச் சமமானவனாக

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (குறள்-50)

என்று போற்றுகிறார். வேமனாரும் இதே கருத்தை வலியுறுத்தி தாய் தந்தையர்களிடம், ஏழை எளியவர்களிடம், பெரியோர் சான்றோரிடம் பயபக்தியுடன் இருப்பவனுக்கு இகம், பரம் இரண்டும் கிடைப்பதுடன் நல்லவன் என்ற பெயரும் கிடைக்கும் என்பதை

தாய் தந்தையர்களிடம் ஏழைகளிடம்
நம்பிய எளிய மக்களிடம்
பிரபுக்களிடம் பயபக்தியுடையவனுக்கு
இகமும் பரமும் கிடைக்கும் வேமா

என்றும் அடுத்தவர்களின் துன்பத்தை தன் துன்பமாக ஏற்று உதவி செய்பவனே உத்தமன் ஆவான். அவனுக்கு இக உலகத்திலேயல்லாமல் பரலோகத்திலும் நல்லகதி கிடைக்கும் என்பதை

அன்னியர்கள் துன்பம் யாவற்றையும் தனதாக
எண்ணுபவன் புவியில் போற்றப்படுவான்
போற்றப்படுவதுடன் பரலோகத்தில் போற்றப்படுவான்
பெற்ற தந்தை வாழ்வு சிறக்கும்
என்கிறார்.

**பிறனில் விழையாமை:** 1. சமுதாயத்தில் கணவன் மனைவியாக இல்லற வாழ்க்கையை மேற்க்கொள்பவர்கள் தம்பதிகளாவர். இவர்களில் மனைவி மட்டும் கணவனைத் தவிர வேறு ஆணைப் பார்க்கக் கூடாது, நினைக்கக் கூடாது என்று வலியுறுத்துகிறது. 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்", 'கணவனே கண் கண்ட தெய்வம்' (பதியே பிரத்யக்ஷ தேவுடு) என்று வாழச் சொல்கிறது. ஆனால் ஆணுக்கு, கணவனுக்கு எத்தகைய கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. இதற்கு 'கணவன் இறந்தால் மனைவி கைம் பெண்'' "மனைவி இறந்தால் புருஷன் புதுமாப்பிள்ளை" என்ற முதுமொழியே சாட்சி. ஆனால் இத்தகைய சமுதாயத்தில் வாழ்ந்த திருவள்ளுவர் ஆண்மகனின் கட்டற்ற உரிமைகளுக்கு கடிவாளம் போடுகிறார்.

இல்வாழ்க்கையை ஏற்ற ஆண்மகன் இல்லாளை விட்டு வேறு பெண்கள் பால் நாட்டம் கொண்டால் இல்லறம் இரு கூறாகிவிடும் என்றார்.

எனைத் துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல். (குறள்-144).

சமுதாயத்தில் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் பிற பெண்களை நாடுபவர்களை ஆங்கிலத்தில் 'womanizer' அதாவது 'சபல சித்தன்' என்றே அழைப்பர் அவர்களை யாரும் உயர்ந்தவர்களாக மதிக்கமாட்டார்கள். உயிரோடு இருந்தாலும் செத்த சவத்திற்குச் சமம் என்று பின் வரும் குறள் மூலம்

விளிந்தாரின் வேறல்லர் மன்றத் தெளிந்தாரில்
தீமை புரிந்து ஒழுகுபவர் (குறள்-143)

சாட்டையடி கொடுக்கிறார். இதே விதமாக வேமனாகும் மன்மதனின் தாக்கத்திற்கு ஆளான ஆண்கள் காமத்திற்கும் முதலிடம் கொடுத்து மனம் போல பெண்களுடன் திறந்த உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவனா தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவனா யார்? என்று பின் வரும் குறள் மூலம் கேள்விக்குறி ஆக்குகிறார். எப்படிச் சொல்வது என்று பல வழி செல்லும் ஆணின் நிலையை

இல்லாளை விட்டு இளங்கன்னியர்
பின் திரிபவர் அறிவிலி
விளைநிலம் விடுத்து தரிசு தேடுவதுபோல
விஸ்வதாபி ராமா கேளடா வேம

1. பிறனில் விழையாமை அதாவது பிறருடைய பெண்களை விரும்பாதிருத்தல் என்பதற்குப் பெரும்பாலான உரையாசிரியர்கள் பிறருடைய மனைவியை விரும்பாதிருத்தல் என்ற பொருள் சொல்கின்றனர். ஆனால் பரிமேலழகர் என்ற அக்கால உரையாசிரியரும் முருகன் என்ற இக்கால உரையாசிரியர்கள் பிறரது மனைவியை என்பதுடன் பிறரது எல்லைக்குள் பாதுகாப்பில் இருக்கும் பெண்களை நாடாதிருத்தல் என்று பொருள் கொடுத்துள்ளனார். இரண்டாவது கருத்தை இக்கட்டுரையில் பின்பற்றப்பட்டிருக்கிறது. பிறரது மனைவியையோ பிறரது எல்லைக்குள், பாதுகாப்பில் இருக்கும் பெண்களை நாடுவது ஏற்புடையதல்ல இழிவானது என்று பின் வரும் குறள் மூலம் எடுத்துரைக்கிறார் வள்ளுவர்.

மேலும் இல்லாளை விட்டு வேறு பெண்கள் பின் அலைபவன் அறிவற்றதன் நன்றாக விளைந்த விளைநிலத்தை விட்டு விளையாத தரிநிலத்தை நாடியவனுக்கு ஒப்பானவன் என்று

வள்ளுவரை வழி மொழிகிறார். மேலும் வள்ளுவர் ஒருவன் எவ்வளவு பாவச் செயல்கள், இழிசெயல்கள் செய்தாலும் பிறரது எல்லைக்குள் பாதுகாப்பில் இருக்கும் பெண்களை நாடும் பாவத்தை மட்டும் செய்யாமல் இருப்பானாக என்று

அறன் வரையான் அல்ல செயினினும் பிறன் வரையான்

பெண்மை நயவாமை நன்று (குறள-150) என்று இரத்து கூறுகிறார்; வேமனாரும் அழகிய இளம் பெண்ணின் கடைக் கண் பார்வைக்கும் மயங்கி அவர்கள் புற அழகில் என்ன தேடுகிறாய் என்று பெண்களின் அழகில் மயங்கி அவர்கள் பின் செல்பவரை

நேர்புடைய பெண்ணின் கண் அழகில்
மயங்கி பிரமை அடைவது ஏன்?
புற அழகில் மயங்கி தேடுவது என்ன?
விஸ்வதாபி ராமா கேளடா வேம

என்று இடிக்கிறார்.

**பெண் வழி சேறல்:**[2] சிறந்த ஆண் மகனானவன் காம இச்சையாலோ கண்முடித்தனமாக அன்பாலோ பெண்களின் பயனில்லாத சொற்களுக்குக் கீழ் படிந்து மற்ற கடமைகளை நண்பர்களை இதர உறவுகளை மறந்து விடலாகாது என்று வலியுறுத்துகிறார். ஆனால் மனைவியோ ˙மற்ற பெண்களோ கடமைக்கு இடையுறாக இருப்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் பேச்சைக் கேட்டு கடமையை மறக்கும் ஆண்மகனால் ஆங்கிலத்தில் கூறப்படும் 'Hen-pecked' அதாவது 'பெண்பிரியர்' என்ற பெயரைத்தான் அடைய முடியும். அதைத் தவிர வேறு சிறந்த பயனை அடைய மாட்டார்கள். அத்துடன் எவ்வளவு சிறப்புற வாழ்ந்தாலும் சிறப்பு அவர்களை அடையாது என்றும்

இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார் தோள் அஞ்சுபவர்
என் சேர்ந்த நெஞ்சத்துடையார்க்கும் எஞ்ஞான்றும்
பெண் சேர்ந்தாம்˙பேதைமை இல்

என்றும் மிக அருமையாக விளக்குகிறார். இக்கருத்தையே வேமனாரும் உணர்த்துகதிறார்.

பெண்டாட்டி பேச்சைக்கேட்டு உடன் பிறப்புகளின்று
வேறுபடுவன் அறிவிலி
நாய்வால் பிடித்து கோதாவாரி நீந்தமுடியுமா
விஸ்வதாபிராமா கேளடாவேம

அரசியலுக்கும் சம்பந்தப்பட்ட பிரிவு என்பதால் மனைவி என்ற உறவு மட்டுமல்லாமல் இதரஉறவுள்ள (சகோதரியோ,காதலிக்கும் பெண்ணோ) பெணகளினி மேல் உள்ள அன்பால் கடமை தவற சந்தர்ப்பம் இருக்கிறது என்றும் பொருள் கொள்ளலாம். (உ.ம்) தமிழ் வரலாற்றிர் மிகப்பெரிய மன்னாக மதிக்கப்படும் இராஜராஜ சோழனுக்கு அவாதின் தடக்கை குந்தவைப்பிராட்டியா் வழிகாட்டியாக இருந்தார். அவரின் சகோதரர் கரிகால் சோழன் என்பவர் நந்தினி என்ற பெண்ணின் மேல் கொண்ட காதலால் அரசாட்சியில் நாட்டம் குறைய அந்தப் பெண்ணால் கொல்லப்பட்டார் என்று சரித்திரம் கூறுகிறது.(கல்கியின் பொன்னியன் செல்வன்) 2. பெண்களின் வழிச் சேறல் என்பதற்கு உரையாசிரியர்கள் காம இச்சையால் மனைவியின் சொல் கேட்டு கடமை தவறுபவன் என்று பொருள் கொடுத்திருக்கிறான். இந்த அதிகாரம் பொருட்பாலில் நட்பியலில் வைக்கப்பட்டு உள்ளது. பொது வாழ்க்கைக்கும். என்று பாவப் பிறவிகள் மனைவியின் அழகில் மயங்கிய அவனால் பெறும் இன்பத்தையே பெரிதாகக் கருதி அவள் வழி நிற்பார்கள். அவ்வழி நின்று தன் உடன் பிறப்புக்களைப் பகைத்து அறிவிலி ஆகின்றனர். அத்தகையவர்களை நாயின் வாலைப் பிடித்துக் கொண்டு கோதாவரி நதியைக் கடக்க நினைப்பவர்களுக்கு ஒப்பிட்டு ஏளனம் செய்கிறார் வேமனார்.

**வரைவின் மகளிர் (வரைவு இல் மகளிர்):** வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் அந்த சமுதாயத்தில் மனைவி அல்லாத மற்ற பெண்களுடன் குறிப்பாக பரத்தையர் களுடனான உறவு கண்டிக்கப்படவில்லை. இது சங்கால இலக்கியங்களை ஓரளவு

அறிந்த யாவரும் ஒப்புக் கொள்ளும் உண்மை. கிளி போல பெண்டாட்டி இருந்தாலும் குரங்கு போல வப்பாட்டி வேண்டும் (சில கலா பெல்லாம் உன்னா கோதிலா உம்புடுகத்தே காவாலி) என்ற தன் மூலம் பரத்தையர் தொடர்பை ஆண்மைக்கு இலக்கணமாகக் கொண்டிருந்தனர் என்பதும் விளங்கும். அப்படிப்பட்ட அந்தக் காலத்திலேயே பரத்தையர் தொடர்பைக் கண்டித்து உள்ளார் திருவள்ளுவர். மனைவியைத் தவிர மற்ற பெண்களை நாடுபவர்களை, கட்டிய மனைவியாக இருந்தாலும் கடமை செய்யத் தடையானால் அவளைத் தவிர்க்க வேண்டும் என்று 'பிறனில் விழையாமை,' 'பெண்வழிச் சேறல்' போன்ற அதிகாரங்கில் போர்க்கொடி உயர்த்துகிறார் வள்ளுவர். அத்தகையவர் ஒழுக்கத்திற்கு முற்றும் முரணான பரத்தையர் தொடர்பைக் கண்டிக்காமல் இருந்திருந்தால் ஆச்சரியப்பட்டிருக்கலாம். வேமனாரும் பரத்தையர் தொடர்பு இருந்திருக்கிறது என்றும் அதனால் கசப்பான அனுபவத்தை எதிர் கொண்டவர் என்றும் அவரைப் பற்றிக் கூறிய கதைகளிலிருந்து தெரிகிறது. (தர்மா ரெட்டி 1984) ஆகையால் வள்ளுவரை விட ஒருபடி மேலாகவே பரத்தையர் தொடர்பை இடித்துரைக்கிறார் வேமனார்.

அன்பு என்பது அணு அளவு கூட இல்லாமல் பொருள் ஒன்றையே குறியாகக் கொண்டு பொருளுக்குப் புன்னகை புரியும் பரத்தையர்களின் அன்பில்லாத பொய்யான தழுவல் கூலிக்கு அமர்த்தப்பட்டவன் இருட்டறையில் யாதொரு தொடர்பில்லாத கன்னிப் பெண்ணின் பிணத்தைப் பொருளாசை கருதி தழுவியதைப் போன்றது. என்பதை

பொருட் பெண்டிர் பொய்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழிஇ யற்று (குறள்-913)

என்கிறார். மேலும் சிறந்த அறிவுள்ள ஆண்மகன் தம் நெஞ்சினை ஒரு நிலைநிறுத்தி ஆளும் ஆற்றல் வாய்ந்தவன் பரத்தையர்களின் சேர்கையை ஒரு நாளும் விரும்பமாட்டான் என்று,

ஆயும் அறிவினார் அல்லார்க்கு அணங் கென்ப
மாய மகளிர் முயக்கு. (குறள்-918)

என்கிறார். இதையே வேமனாவும் பொருளுக்காகச் சுகம் கொடுக்கும் பரத்தையர் காட்டும் அன்பு அன்பாகாது. காதல் காதலாகாது. நான்குபேர் நடக்கும் வழியில் எவ்வாறு புல் முளைக்காதோ முளைத்தாலும் வளராதோ அதுபோல பரத்தையர்களின் மனதில் உண்மையான பாசம் இருக்காது.

விலை மகளிர் மூலம் காதல்
கிடைக்காது கிடைத்தாலும் நிலைக்காது
நால்வர் நடக்கும் பாதையில்
புல் முளைக்காது முளைத்தாலும் வளராது வேம

என்கிறார். இத்தகையவர்கள் தட்டு நிறைய தவுடு நிறைத்து இட்டால் ஒழிய பால் தராத எருமை போல கை நிறைய காசு கொடுத்தால் ஒழிய அன்பு காட்ட இல்லை அணைக்கவேமாட்டார்கள் என்பதை

தட்டு நிறையாத தவுடு வைக்காவிடில்
காம்பைத் தொடவிடாது எருமை
விலை மகளிர் எப்படிக் காட்டுவர் சும்மா
விஸ்வதாபிராமா கேளடா வேம

என்கிறார்.

**கள்ளுண்ணாமை:** ஆண்களை தங்கள் நிலை கெடச் செய்து நாணத்தை இழக்க வைத்து இழிநிலை அடையச் செய்யும் தீய பழக்க வழக்கங்களில் தலையானது மது அருந்துதல். மது தன்னை அருந்திய ஆடவரின் மதியைக் கெடச்செய்து தன்னிலை மறந்து தந்தனத்தானா பாட வைக்கும்.தன்னை நம்பிய இல்லாளை, இனிய மழலைகளை, ஈன்ற தாய் தந்தைகளை வருந்தச் செய்யும். அத்துடன் வாழ வனக செய்யும் சொந்தப் பந்தங்களையும் இழக்கச் செய்யும். அத்துடன் நில்லாது தான் பிறந்த நாட்டிற்குத் தன்னை ஒரு நல்ல, சிறந்த குடிமகனாகாமல் தடுத்து 'குடி' மகனாக வாழும் அவல நிலையை ஏற்படுத்தும்.

சங்க காலத்திலும் சரி வள்ளுவர் வாழ்ந்த காலத்திலும் சரி கள் உண்பதற்குத தடையேதும் இருந்ததாகத்தெரியவில்லை தடைவிதித்ததாகவும் தெரியவில்லை. அரசிலிருந்து ஆண்டிவரை கள் குடிக்கும் பழக்கம் வழக்கத்தில் இருந்தும் இருக்கிறது.

செல்வந்தர்களும் சீமான்களும் இதைக் கௌரவச் சின்னமாக மதித்திருக்கிறார்கள் அத்தகைய கால நிலையில் வள்ளுவர்கள் உண்ணுதலை எதிர்த்து முரசு கொட்டி இருக்கிறார்கள் என்பது வியக்கத்தக்க விஷயம் கள்ளுண்ணுதலால் ஏற்படும் தீங்கைப்பற்றி பத்து அரிய குறள் முத்துக்களை அள்ளி வழங்கி இருக்கிறார் திருவள்ளுவர் பத்துகுறள்களும் பழுதில்லாத முத்துக்களேயானாலும் அவற்றுள் நல்முத்துக்களான ஒன்றிரண்டிற்கு விளக்கம் இங்கு காண்போம்.

கள் என்னும் அரக்கனுக்குப் பயந்து நாணம் என்னும் நற்குண மங்கை நல்லாள் விலகி விடுவாள். கற்று உணர்ந்த சான்றோர்களும் மதிக்கமாட்டார்கள். நாணம் என்னும் நங்கையும், சான்றோரும், அவர்களின் மதிப்பும் வேண்டும் என்று, என்னும் நல்ல ஆண்மகன் அறிவையும் உடல் நலத்தையும் இழக்கச்செய்யும் கள் என்னும் நஞ்சை உண்ணாதிருக்க வேணடும் என்றும் கள் என்னும் காமுகனுக்கு கையாளான ஆண்மகனைக்கண்டு பகைவர்களும் அஞ்சமாட்டார்கள், இதை

உண்ணற்க கள்ளை உணில் உண்க சான்றோரான்
எண்ணப்பட வேண்டாதார் (குறள்-922)

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்(குறள்-926)

குறள்களின் மூலம் உணர்த்துகிறார் வள்ளுவர்.

வேமனார் மது அருந்துதல்போன்ற எவ்வித விமர்சனமும் செய்ததாக எந்தப்பாடலும் காணப்படவில்லை. ஒரே ஒருபாட்டில் மட்டும் பர உலக இன்பத்திற்காக இக உலகில் யாகம் செய்து அதில் படைத்த புலாலையும் மதுவையும் உண்ணும் ஆசாரததை உடைய பிராமணர்களின் ஆசார பழக்க வழக்கங்களை ஏளனம் செய்கிறார். ஆகையால் மது அருந்தும் பழக்கம் இருந்தாலும் வேமன அதைக் கண்டிக்கவும் இல்லை: ஆதரிக்கவும் இல்லை என்று தெரிகிறது.

**சூது:** இலக்கியச் சான்றுகளின் படி வள்ளுவர் காலத்தில் சூதாட்டம் சமுதாயத்தில் தங்கு தடையின்றி வழக்கத்தில் இருந்திருக்கிறது. மேல் குடியிலிருந்து கீழ்க்குடி வரை சூது ஆடும் பழக்கத்தைக் கைக் கொண்டு இருந்திருக்கிறார்கள். இது புத்திக் கூர்மையையும் சந்து பொந்துகளையும் (tricks) கற்கும் கலையாக இருந்திருக்கிறது. அரசமாளிகைகளில் போர்த்தந்திரங்களை விளக்க சதுரங்கமும் பொழுது போக்காக பகடை ஆட்டம், தாயம் என்ற பெயரில் பொது மக்களிடையே பரவி இருந்திருக்கிறது. போர் முறைகளை விளக்க சதுரங்களும் கத்தியின்றி இரத்தமின்றி நாட்டையும் செல்வத்தையுமம் பறிக்கப் ‘பகடை’ என்னும் சூதாட்டம் ஒருவழியாக இருந்திருக்கிறது என்பது நம் எலலோருக்கும் தெரிந்த புராணக் கதை மகாபாரதம் மூலம் விளக்குகிறது. அதில் துரியோதனை தருமனிடம் இருந்து நாட்டையும் செல்வத்தையும் பறித்துக் கொண்டு பனிரெண்டு வருடவனவாசமும் ஒரு வருட அஞ்ஞாதவாசமும் கொடுத்தது இந்த பகடை என்னும் சூதாட்டத்தினால் தான். இந்தத் தோல்வியை மதித்து பாண்டவர்கள் வனவாசமும் அஞ்ஞாதவாசமும் செய்தது பகடை ஆட்டத்திற்கு அந்நாளில் இருந்த முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது.. மகாபாரதம் அத்தகைய சூதாட்டத்தை அந்நாளிலேயே அதாவது தன் காலத்திலேயே துணிந்து கண்டித்திருக்கிறார் வள்ளுவர்.

இல்வாழ்க்கையில் கூறப்பட்ட நெறிகளில் பிற பெண்களை நாடக் கூடாது என்ற ஒழுக்கத்தில் கணிகையர்களை விலக்க வேண்டும் என்ற மறையில் வள்ளுவருடன் ஒத்த நோக்குகளைக் கொண்டவேமனார் கள்ளுண்ணாமையிலும், சூதிலும் எந்த கருத்தையும் விமர்சனத்தையும் வெளிப்படுத்தாதது வியப்பைத் தருகிறது. இதற்குக் காரணம் முதலாவதாக அதிகாரமும் செல்வாக்கும் நிறைந்த வம்சத்தைச் சேர்ந்தவர் வேமனார் என்ற கருத்து இருப்பதால இவைகளை கௌரவச்சின்னமாக மதித்திருக்க வேண்டும். இரண்டாவதாக அந்தப்பழக்கங்களால் எந்தவித பாதிப்புக்கும் ஆளாகாததால் அவைகளைப் பற்றி விமர்சிக்காமல் விட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இது என் கருத்து மாத்திரமே. போதிய ஆதாரம் தேட வேண்டும்.
சூதாட்டம் ஒருவனை ஆண்டி ஆக்குவதோடு மட்டுமல்லாது கௌரவத்தையும் மதிப்பையும் மரியாதையையும் இழக்கச் செய்கிறது. சூது என்னும் அதிகாரத்தில் அரும் பெரும் அறிவுரைகளாக பத்துக் குறள்களைப் படைத்ததிருக்கிறார் வள்ளுவர். அவற்றுள் சில பின்வருமாறு: சூது ஆடும் போது முதலில் சில சமயங்களில் வெற்றி

கிடைக்கும். அந்த வெற்றி மென்மேலும் சூது ஆட வேண்டும் என்ற ஆவலைத் தூண்டும். அந்த ஆவலுக்கு இணற்கி சூதாடினால் அதங்பாதாளத்தில் தள்ளி வடடு விடும். ஏனென்றால் அந்த வெற்றி தூண்டிலல் கட்டிய இரை போன்றது. எளிதில் இரை கிடைக்கிறது என்று இரையை உண்ணவந்த மீன் எவ்வாறு தூண்டிலில்லிக்கிக் கொள்ளுமோ அவ்வாறே ஆரம்ப வெற்றியின் சுவையில் சூதாடினால் பிறகு ஆழ்ந்த போன்ற தோல்வியைச்சந்தித்து தரித்திரம் என்னும் மீளாத நரகத்தில் விழ வேண்டியது வரும் என்பதைதூண்டிற் பொன்மீன் விழுங்கியற்று

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம் (குறள்-931)

என்ற குறள் மூலம் விளக்குகிறார். மேலும் நல்ல படிப்பு, நடையுடை, பா வனை, செல்வம், செல்வாக்கு உள்ளவர்கள் சூதாட்டம் என்னும் அரக்கனின் பிடியில் சிக்கினால் நற்குணங்களால் வரும் நன்மையை அடையமாட்டார்கள் என்று.

உடை செல்வம் ஊண் ஒளி கல்வி என்ற ஐந்தும் அடையவாம் ஆயம் கொளின் என்கிறார்.

வள்ளுவரும் வேமனாரும் கூறிய ஆண் ஒழுக்கம் அக்காலத்திற்கு மட்டுமல்ல இக்காலத்திற்கும் மிகவும் இன்றியமையாததாகும். வளர்ந்து வரும் நாகரீக, விஞ்ஞான, இயந்திரம் உலகில் பாசங்களும், நேசங்களும், உறவுகளும் மூலைக்குத் தள்ளப்பட்டு எல்லாம் வியாபார மயமாகி வருகிறது. கூடவே சுதந்திரம் என்றும் தனித்தன்மை என்றும் பேசி ஒருவருக்காக ஒருவர் வாழ்தல் மறைந்து சுயநலமாக அந்த நிமிடம் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணம் மேலோங்கி உள்ளது. இதனால் குடும்ப வாழ்க்கைக்கும், தாம்பத்திய உறவிற்கும் ஆபத்து வந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் ஆணும் பெண்ணும் சுதந்திரத்தைப் பகிர்ந்து கொள்வதைப் போலக் குடும்பக் கடமைகளையும் பொறுப்புடன் நிர்வகித்து வள்ளுவர் கூறும் வழி நடந்தால் இல்லறம் நல்லறமாக அமையும்.

மேலும் ஆயிரம் மனைவிகளுடனும் அதற்கு மேல் பரத்தையர்களின் தொடர்பும் கட்டுப்பாடற்று நிலவிய அக்காலத்தில் கூட பீடிக்காத AIDS , HIV என்ற தீராத, மருந்துக்குக் கட்டுப்படாத நோய்களைப் பற்றிய எச்சரிக்கை மிக வலுவாக விளம்பரம் செய்யப்படுகிறது. இந்நிலையில் வள்ளுவரின் அறிவுரைப் படி மனைவி தவிர மற்ற பெண்களுடன், காசுக்காக இன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் விலை மகளுடனும் கொள்ளும் உறவுகளைத் தவிர்ப்பது வாழ்க்கை என்னும் பயணத்தை இனிதாக நடத்த வழி வகுக்கும்.

அதே போல பணத்தையே வாழ்க்கையாகக்கருதி பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும் என்னும் பழமொழியை மெய்ப்பித்து இயந்திர கதியாக மாறிய இன்றைய சமுதாயத்தில் புத்தியையும் உடல் நலத்தையும் கெடுக்கும் கள்ளுண்ணுதல், பொருளாதாரத்தை நிலை குலைய வைக்கும் சூது போன்ற பழக்கங்களையும் தவிர்ப்பது சமுதாயத்தில் பெருமையுடனும் கௌரவத்துடனும் வாழவகிக்கும் என்பதில் ஐயமில்லை.

**முடிவுரை :**

1. நீதி நூல்கள் என்பவை நல்லது எது கெட்டது எது என்று போதிக்கும் சிறந்த படைப்புக்களாகும். அத்தகைய பெருமை வாய்ந்த நீதிகளை நல்கிய திருவள்ளுவரும் வேமனாவும் அக்காலத்தில் மட்டுமல்லாமல் நவ நாகரீகங்கள் நிறைந்த இக்காலத்திற்கும் உரியவாகள் என்பது மறுக்க முடியாத உண்மை.
2. திருவள்ளுவரும் வேமனாவும் காலத்தால் வேறுபட்டிருந்தாலும் கருத்துக்களால் ஒன்றுபட்டு ஆணுக்கும் ஒழுக்கம் தேவை என்பதை வலியுறுத்துகின்றனர்.
3. ஒழுக்கம் என்பது பெண்ணிற்கு மட்டுமல்ல ஆணுக்கும் அவசியம் என்பதைத் திருக்குறளும் வேமனபத்தியங்களும் மிகத் தெளிவாக விளக்குகிறது.
4. ஒழுக்கமில்லாமல் காம இச்சையால், பெண்ணை நாடிச் செல்லும் ஆண்மகனைத் திருவள்ளுவர் உயிரற்ற சடலத்திற்கும் வேமனார் தரிசு நிலத்திற்கும் ஒப்பிட்டு இழிவுபடுத்துகின்றனர். எனவே சக்தி இல்லையேல் சிவமில்லை சிவமில்லையேல் சக்தி இல்லை என்பதற்கிணங்க ஆண் பெண் என்ற இரு சக்திகளும் சமமாக இருந்தால்தான் வாழ்க்கை என்னும் வண்டியை வகையோடு செலுத்த முடியும் என்றும் பெண்ணுக்கு மட்டுமல்ல ஆணுக்கும் ஒழுக்கம் தேவை என்ற வள்ளுவரையும் வேதனாவையும் போற்றுவோம்.

**நூற்பட்டியல் :**

1. கந்தசாமி.சொ.ந.2001. Tamil Literature And Indian philosophy, International Institute of Tamil studies, C.I.T. campus, Taramani Chennai.
2. சாஸ்திரி, ஜெயந்த சுப்ரமணிய. 2004. சி.பி. ப்ரவுன் ஸ்ரீ.வேமன் பத்ய சாரமிருதரு, மோகன் பப்ளிகேஷன்ஸ் அஜந்தா ஹோட்டல் எதிரில். கொத்த கும்மம், இராஜமுந்திரி-1.
3. தண்டபாணி தேசிகர்.
4. தர்மா ரெட்டி. 1984. திருவள்ளுவர்-வேமனர் ஓர் ஒப்பாய்வு. (A Comparalistive of Tiruvalluvar and vemana) திரு. வேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.
5. போப். ஜீ.யு. (Tr.) 1988 திருக்குறள், தமிழ்ப்பல்கலைக் கழகம் (ஆப்செட்) பிரஸ், தஞ்சாவூர்-01.
6. முருகரத்தினம் தி. 2000. வள்ளுவரை அறிந்தோமா? தமிழ்ச்சோலை, அறவாழிநகர், மதுரை-21.
7. முருகன் பி.1995 திருக்குறள்-திறவுகோல் நியூ-செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை-98.